மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மைசூரிலுள்ள ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் இருக்கின்ற வாய்ப்பை இவர்கள் பயன் படுத்திக்கொள்ளலாம்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : பி. எட். படிப்புக்காக விண்டர் கம் சம்மர் கோர்ஸ் நவம்பர் மாதம் முதல் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் துவக்க இருப்பதாகச் சொல்கிறார்கள். அதற்கு அரசின் அனுமதி கேட்கப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அது பற்றிய விவரம் இல்லை. தனியாகக் கேட்கவும்.

Secondary Grade Teachers and Specialist Teachers

*75 *Q.*—THIRU K. MEENAKSHISUNDARAM, THIRU S. MUTHUSWAMY and THIRU C. R. LAKSHMIKANTHAN: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether there is any proposal with the Government to regularise the services of Secondary Grade Teachers and Specialist Teachers, appointed on or after 1st April 1970, from the date of their joining duty as had been done in the case of Graduate Teachers, sanction increments and pay the arrears; and

(*b*) if so, when it will be implemented ?

இடைநிலை ஆசிரியர்கள், சிறப்பாசிரியர்கள்.

திரு. க. மீனாட்சிசுந்தரம், திரு. செ. முத்துசாமி, திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறோம்—

(அ) உயர்நிலைப் பள்ளிகளில் 1-4-1970 அன்றும் அதற்குப் பின்பும் பணியில் சேர்ந்த இடைநிலை ஆசிரியர்கள், சிறப்பாசிரியர்கள் ஆகியோருக்கும், பட்டதாரி ஆசிரியர்களுக்கு அளிக்கப் பட்டதைப் போல அவர்கள் பணியில் சேர்ந்த நாள் முதலே பணி வரன்முறை செய்து, ஊதிய உயர்வு அனுமதித்து நிலுவைத் தொகையை வழங்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்பொழுது அமுல்படுத்தப்படும் ?

1978 செப்டம்பர் 12]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) ஆம்.

(இ) இப்பொருள் பற்றிய கோரிக்கை அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: ஒரு பிரிவு ஆசிரியர்களுக்கு அளிக்கப்படுகின்ற சலுகைகள் அதே ஆசிரிய சமுதாயத்திலுள்ள மற்றொரு பிரிவு ஆசிரியர்களுக்கு அளிக்கப்படாத நடைமுறைச் சிக்கல்கள் இன்றைய தினம் இருப்பதால், இனிமேலாவது பிறப்பிக்கப்படும் ஆணைகள் எல்லாம் ஆசிரிய சமுதாயத்திலுள்ள அனைத்துப் பிரிவினருக்கும் பொருந்துகின்ற வகையில் வெளியிடப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அது பற்றி நேற்றே நான் பதில் சொல்லும்போது, இப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்படுகின்ற காரணத்தையும் சொன்னேன். அந்த அடிப்படையில் இதுவும் பரிசீலிக்கப்படும்.

Part-final withdrawals from Provident Fund Amounts.

* 76 *Q.*—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether, as per G.O. Ms. No. 1189, Finance (Funds), dated 4th September 1974, teachers are eligible for sanction of Part-final withdrawals from their Provident Fund amounts; and

(*b*) if so, the reasons for not extending this concession to the Local Body employees?

வருங்கால வைப்பு நிதியிலிருந்து பகுதி இறுதிக் கணக்காகத் தொகை வழங்குதல்.

திரு. பி. ஆர். தாமஸ்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) நிதித் துறையின் (நிதிகள்) 4-9-1974 ஆம் நாளிட்ட 1189 ஆம் எண் அரசாணையின்படி ஆசிரியர்கள், தங்கள் வருங்கால வைப்பு நிதியிலிருந்து பகுதி இறுதிக் கணக்காகத் தொகை வழங்கப்படுவதற்கு தகுதியுடையவர்களாவார்களா?

(இ) ஆமெனில், இச்சலுகையை உள்ளாட்சி மன்றப் பணியாளர்களுக்கும் நீட்டிக்காததற்கு காரணம் யாது?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS